நாட்டுப் புறவியல் கலைச் சொல் அகராதி

முனைவர்: க. இந்திரசித்து

என்னுரை

சேலம் மாவட்ட நாட்டுப்புறப் பாடல்களைப் பற்றி ஆய்வு செய்யுங்கால் யான் தொகுத்த நாட்டுப்புறவியல் தொடர்பான கலைச்சொற்கள் இப்பொழுது 'நாட்டுப் புறவியல் கலைச்சொல் அகராதி' என்னும் பெயரில் நூலாக வெளிவருகின்றது. இத்துறையில் எனக்கு ஆர்வமும், ஊக்கமும் பிறப்பதற்கு உறுதுணையாக இருந்தவர் என்னுடைய ஆசிரியரும், வழிகாட்டியுமான ஆய்வுப் பேரறிஞர் டாக்டர் முல்லை ஆதவன் அவர்களே பெரிதும் காரணம் ஆவார். பெருந்தன்மையும், மனிதாபிமானமும் ஒருங்கே பெற்றுத் திகழும் இவருக்கு என் இதயம் கனிந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந் நூல் வெளிவருவதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பவர் பதிப்புச் செம்மல் புலவர் மு. வைத்திலிங்கம் அவர்களே ஆவார். என்னைச் சந்திக்கும் போதெல்லாம் நூலை எழுதித் தாருங்கள் என்று அன்புக் கட்டளை இட்டு, உற்சாகப்படுத்தி, ஐயம் ஏற்படும் இடங்களில் எல்லாம் பல மணி நேரம் விவாதித்து, நூலை முழுமை பெறச் செய்தவர் இவரே ஆவார். அஃதன்றியும், எவ்வளவோ இடர்ப்பாடுகளுக்கிடையேயும் தமது தேன் தமிழ்ப் பதிப்பகத்தின் வாயிலாக இந்நூலை வெளியிட்டுள்ளார். இவருக்கு என் உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலில் உள்ள சில ஆங்கிலக் கலைச் சொற்களை தமிழாக்கம் செய்வதற்குத் துணை புரிந்த திரு. வீ. சந்திரமோகன், எம்.ஏ.,எம்.எட்., அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நூலின் கையெழுத்துப் படியை பல முறை மாற்றியும் திருத்தியும் எழுதித் தந்து உதவிய என்னுடைய துணைவியார் திருமதி. இ. வளர்மதி, எம்.ஏ.பி.எட்., அவர்களுக்கு நன்றி கூறுவது எனக்கு நானே நன்றி கூறிக் கொள்வதற்கு ஒப்பாகும்.

நாட்டுப்புறவியல் துறையில் மேலும் பல நூல்கள் எழுதுவதற்கு இந்நூல் ஒரு தொடக்கமாக அமையும் என்று நம்புகிறேன். பெரிய பெரிய ஆலமரங்களுக்கு அடியில்தான் சிறிய சிறிய காளான்கள் முளைக்கின்றன. ஆலமரங்கள் இருக்கின்ற போது காளான்கள் ஏன் என்ற கேள்வி அர்த்தமில்லாதது. ஏனென்றால் ஒவ்வொரு படைப்பிற்கும் அர்த்தத்தை இயற்கை அதன் ஆழத்தில் புதைத்திருக்கிறது. நான் என் வாழ்க்கையை அர்த்தப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். அதனால்தான் படிக்கிறேன்; எழுதுகிறேன்; பேசுகிறேன். நாட்டுப்புறவியல் துறைக்கு இந்நூல் சிறிதளவாவது பயன்பட வேண்டும் என்பதற்காகவே வெளியிடப்படுகிறது. அந் நோக்கம் நிறைவேறினால் பெரிதும் மகிழ்ச்சியடைவேன்.

இப்படிக்கு,
க. இந்திரசித்து

அத்தனூர்ப்பட்டி அ. நி.
வாழப்பாடி (வழி)
சேலம் மாவட்டம்.

இந் நூல்......

மனிதநேயம்
என்னும்
மகரந்தப் பூக்கள்
பூத்துக் குலுங்கும்
இலக்கிய நந்தவனமாய்
இருக்கும்
எங்கள்
ஆய்வுப் பேராசிரியர்
டாக்டர் முல்லை ஆதவன்
அவர்களுக்கு இந்நூலை
அன்புப் பரிசாக்குகிறேன்.

—க. இந்திரசித்து

உள்ளடக்கம்

எண். பக்கம்

1. நாட்டுப்புறவியல் வரலாறு 1

2. நாட்டுப்புறவியல் கலைச்சொல் அகராதி 13

3. வட்டார வழக்குச்சொல் அகராதி 49

4. பேச்சுத் தமிழ் அகராதி 59

5. பொதுவான கலைச்சொல் அகராதி 87

1. நாட்டுப்புறவியல் வரலாறு

நாட்டுப்புறவியல்-விளக்கம் :

'Folk Lore' என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் நாட்டுப்புறவியலைப் பற்றி அறிஞர்கள் வெவ்வேறு வகையாக விளக்கம் தந்துள்ளனர். 'Folk' என்பதை 'நாட்டார்' என்னும் சொல்லால் சிலர் அழைப்பர்.

> ''Folk என்பதற்கு 'நாட்டார்' என்ற சொல் மிகப் பொருத்தமான ஒன்றாகும். நாட்டார் கூட்டம் என்று மக்கள் வழக்கிலும் காணப்படுகின்றது. இலங்கைத் தமிழ் மக்களும் 'நாட்டார்' என்ற சொல்லையே கையாளுகின்றனர். மேலும் 'Lore' என்பதற்கு, 'வழக்காறு' என்ற சொல்லும் பொருத்தமானதே''

என்று தே. லூர்து அவர்கள் நாட்டுப் புறவியலை 'நாட்டார் வழக்காற்றியல்' என்று அழைத்து, அதற்கான விளக்கத்தைத் தருகின்றார். (தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல் ஓர் அறிமுகம், பக். 3·) ; ச. வே. சுப்பிரமணியம் அவர்கள் 'நாட்டுப்புறவியல்' என்ற சொல்லைக் கையாளுகின்றார். அ. மு. பரமசிவானந்தம் அவர்கள், 'வாய்மொழி இலக்கியம்' என்று குறிப்பிடுகிறார். 'நாடோடி இலக்கியம்' என்றும் சிலர் அழைப்பர்.

நாட்டுப்புறவியலை 1. நாட்டுப்புற இலக்கியம் 2. நாட்டுப்புறக் கலைகள் மற்றும் நம்பிக்கைகள் என இரண்டாக சு. சக்திவேல் அவர்கள் பிரிக்கின்றார். நாட்டுப் புறவியலை 1. செயல்வகை (Action type) 2. அறிவியல் வகை (Science type) 3. மொழியியல் வகை (Linquistics type) 4. இலக்கியவகை (Literature type) என நான்கு

வகையாகவும் பிரிப்பர். நாட்டுப்புறவியலை சு. சண்முக சுந்தரம் அவர்கள் 1. இலக்கியமானவை 2. இலக்கியமல்லாதன என இரண்டாகப் பிரிக்கிறார்.

ஆங்கிலத்தில் 'Folk lore' என்ற வார்த்தையை வில்லியம் ஜான்தாமஸ் (William John Thomas) என்ற ஆங்கிலேயர் முதன் முதலில் 1846-ல் உருவாக்கினார். அதன் பிறகு இவ்வார்த்தையை எல்லா அறிஞர்களும் கையாளத் தொடங்கினர். நாட்டுப்புறவியல் துறை இன்று தனித் துறையாக வளர்ந்து வருகிறது. இத்துறைச் சமூகவியல், மானிடவியல், உளவியல் போன்ற பிறதுறையோடு தொடர்மடையதாய் உள்ளது.

நாட்டுப்புறவியல் :

நாட்டுப்புறவியல் (Folk lore) என்பது, நாட்டுப்புறவியல் தொடர்பான அனைத்துச் செய்திகளையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கும் இயலாகும். இவ் வியல் தொடர்பான ஆய்வுகள் இன்று பல்கிப் பெருகி வந்து கொண்டுள்ளன. அதற்குத் துணைபுரியும் முகத்தான் இவ் வகராதி வெளியிடப் படுகிறது. அதற்குமுன் நாட்டுப் புறவியல் பற்றிய அறிமுகத்தைச் சுருக்கமாக இக் கட்டுரை தெரிவிக்கிறது.

பொதுவாக நாட்டுப்புறவியலை 1. நாட்டுப்புற இலக்கியம் 2. நாட்டுப்புறக் கலைகள் என இரண்டாகப் பிரிப்பர். இதனையே சிலர் சொல்லுறுகலை, சொல்லுறாக் கலை எனவும் பிரிப்பர். நாட்டுபுற இலக்கியம் என்ற பிரிவுக்குள் கீழ்க்கண்ட வகைகளை அடக்குவர்.

1. நாட்டுப்புறப் பாடல்கள்
2. நாட்டுப்புறக் கதைகள்
3. கதைப் பாடல்கள்
4. பழமொழிகள்
5. விடுகதைகள்

நாட்டுப்புறக் கலைகள் என்னும் பிரிவுக்குள் கீழ்க்கண்ட வகைகளை அடக்குவர்.

1. நாட்டுப்புற விளையாட்டுகள்
2. நாட்டுப்புறக் கைத்தொழில்கள்
3. நாட்டுப்புற ஆடல்கள்
4. நாட்டுப்புறக் கலைகள்

நாட்டுப்புற இலக்கியம் மற்றும் நாட்டுப்புறக் கலைகள் இரண்டும் சேர்ந்ததையே நாட்டுப்புறவியல் என்பர்.

நாட்டுப்புற இலக்கியம் :

பழங்காலம் தொட்டு ஏட்டில் எழுதாமல், வாய்மொழியாகவே இவ் இலக்கியங்கள் வழங்கி வருகின்றன. தற்காலத்தில்தான் இவைகள் அச்சில் வந்து கொண்டுள்ளன. நாட்டுப்புற இலக்கியம் இன்று நாட்டுப்புறங்களில் மட்டுமன்று, நகரப்புறங்களிலும் காணப்படுகின்றன. இவ் இலக்கியங்கள் கிராம மக்களின் பண்பாட்டைப் பிரதிபலிக்கின்றன. எளிய நடையில், எளிய முறையில் இவைகள் அமைந்து இருக்கும். பெரும்பாலும் பாடியவர் பெயர் இருப்பதில்லை.

நாட்டுப்புறப் பாடல்கள் :

நாட்டுப்புறப் பாடல்கள் பற்றிய ஆய்வு, பிற நாட்டுப்புற இலக்கியங்களை விட மிகுதியாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. நாட்டுப்புறப் பாடல்களே பொது மக்கள் கவனத்தையும், ஆய்வாளர்கள் கவனத்தையும் கவர்ந்துள்ளன. 1943-ஆம் ஆண்டு மு. அருணாசலம் அவர்கள் தொகுத்த, 'காற்றிலே மிதந்த கவிதை' என்னும் நூலே தமிழகத்தில் வெளியிடப்பட்ட முதல் நாட்டுப்புறப் பாடல் தொகுப்பாகும். 1940-ஆம் ஆண்டு ஈழத்திலிருந்து தி. சதாசிவ ஐயர் 'வசந்தன் கவித்திரட்டு' என்ற நூலை வெளியிட்டார். இதுவே தமிழில் வெளிவந்த முதல் நாட்டுப்புறப் பாடல் தொகுப்பு என சு. சண்முக சுந்தரம் குறிப்பிடுகின்றார்.

கி. வ. சகந்நாதன் அவர்கள் நாடோடி இலக்கியம்(1944), மச்சுவீடு (1952), குழந்தை உலகம் (1952), மலையருவி (1958) என்னும் நூல்களை வெளியிட்டார். தி. நா. சுப்பிரமணியம் காட்டு மல்லிகை (1952) என்னும் நாட்டுப்புறப் பாடல் அடங்கிய நூலை வெளியிட்டார்.

தமிழண்ணல், தாலாட்டு (1956), காதல் வாழ்வு (1960), பிறைதொழும் பெண்கள் (1975) என்னுல் நூல்களை வெளியிட்டுள்ளார். இலங்கையைச் சேர்ந்த வ. மு. இராமலிங்கம் இலங்கை நாட்டுப் பாடல்கள் (1957) என்னும் நூலை வெளியிட்டார்.

மு. அருணாசலம் 1958-ஆம் ஆண்டு, 'தாலாட்டு இலக்கியம்' என்ற நூலையும், 1959-ஆம் ஆண்டு 'நாடோடிப் பாடல்கள்' என்ற நூலை ர. அய்யாசாமியும் வெளியிட்டார்கள்.

ந. வானமாமலை தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள் (1960), தமிழர் நாட்டுப் பாடல்கள் (1964) என்னும் நூல்களை வெளியிட்டார். வாய்மொழி இலக்கியம் என்னும் நூலை (1964) அ. மு. பரமசிவானந்தம் வெளியிட்டார். தமிழக நாட்டுப் பாடல்கள் (1965) என்னும் நூலை மு. வை. அரவிந்தன் தொகுத்து வெளியிட்டார். செ. மு. அன்னகாமு 1959-ல் ஏட்டில் எழுத்தாக்க விதைகள் என்னும் நூலை வெளியிட்டார்.

எம். ஏ. பட்டப் படிப்பின் ஆய்வுரையாக தமிழில் அம்மானைப் பாடல்கள் என்னும் நூலை 1970-ஆம் ஆண்டு த. இராசாராம் வெளியிட்டார். ஆறு. அழகப்பன் தாலாட்டுக்கள் ஐநூறு (1972) என்னும் நூலை வெளியிட்டார். தன்னுடைய எம். லிட். பட்டத்திற்கு எழுதப்பட்ட ஆய்வுரையை 'நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு' என்னும் நூலாக வெளியிட்டுள்ளார். 1975-ஆம் ஆண்டு பா.ரா. சுப்பிரமணியம் அவர்கள் தன்னுடைய டாக்டர் பட்ட ஆய்வுரையை 'தமிழக நாட்டுப் பாடல்கள்' என்னும் பெயரில் நூலாக வெளியிட்டார்.

கொங்கு நாட்டுப்புறப் பாடல்கள் (1978) என்னும் நூலை க. கிருட்டினசாமி எழுதித் தொகுத்து வெளியிட்டார். ஆறு. இராமநாதன் நாட்டுப்புறவியல் ஆய்வுகள் (1979) என்னும் நூலில் நாட்டுப்புறப் பாடல்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். இவர் தென்னார்க்காடு மாவட்ட நாட்டுப்புறப்பாடல்களை ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெற்

றுள்ளார். இவர் இவ் ஆய்வுரையை 'நாட்டுப் பாடல் காட்டும் தமிழர் வாழ்க்கை' என்னும் பெயரில் நூலாக வெளியிட்டுள்ளார். சு. சண்முக சுந்தரம் நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு (1976), தமிழக நாட்டுப்புறப் பாடல்கள் (1978) என்னும் நூல்களை வெளியிட்டார். திருநெல்வேலி நாட்டுப்புறப் பாடல்களை ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். இவ் ஆய்வுரை, 'திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறப் பாடல் காட்டும் சமுதாயம்' என்ற பெயரில் நூலாக வெளி வந்துள்ளது. வி. சரசுவதி நாட்டுப்புறப் பாடங்களை ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். நாட்டுப்புறப் பாடல் நலந்தரு விளக்கம்' என்ற நூலை சுரேந்திரன் எழுதியுள்ளார். நாட்டுப்புற இலக்கியமும் பண்பாடும் என்ற நூலை முனைவர் அ. ஆறுமுகம் எழுதினார். இந் நூல்களை சேலம் தேன் தமிழ்ப் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. கொங்கு நாட்டுப்புற இலக்கியத்தை ஆராய்ந்து க. கிருட்டினசாமி டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். சேலம் மாவட்ட நாட்டுப்புறப் பாடல்களை ஆரய்ந்து, கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தில் க. இந்திரசித்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்.

இவை தவிர நாட்டுப்புறப் பாடல்களைப் பற்றி ஏராளமான கட்டுரைகள், மாத இதழ்களிலும், மலர்களிலும் வெளிவந்துள்ளன; வெளிவந்து கொண்டுள்ளன.

நாட்டுப்புறக் கதைகள் :

நாட்டுப்புறக் கதைகளைத் தொகுத்து பலர் வெளியிட்டுள்ளனர். தமிழில் விக்ரமாதித்தன் கதை, தமிழறியும் பெருமாள் முதலிய கதைகள் காணப்படுகின்றன. ஆனால் இவைகளை நாட்டுப்புறக் கதைகள் என்று கூற இயலாது. பஞ்சதந்திரக் கதைகளும், ஈசாப் கதைகளும் நாட்டுப்புறக் கூறுகளை பிரதிபலிக்கின்றன. வாணன், 1952-ஆம் ஆண்டு 'உலக நாடோடிக் கதைகள்' என்ற தொகுப்பினை வெளியிட்டார். கா. அப்பாத்துரை நாட்டுப்புறக் கதைகள் (1954) என்ற தொகுப்பை வெளியிட்டார். தெனாலிராமன் கதைகளை இராமையா (1955), அரு. இராமநாதன் (1958)

கி. மா. பக்தவச்சலன் (1977) ஆகியோர் தொகுத்து வெளியிட்டனர். தென்னாட்டுப் பழங்கதைகளைத் தொகுத்து ஆறு பாகங்களாக சு. அ. இராமசாமிப் புலவர் வெளியிட்டார். மதனகாமராஜன் கதைகள் (1958), மரியாதைராமன் கதைகள் (1952) என்னும் இரு நூல்களை அரு. ராமநாதன் வெளியிட்டார்.

வை. கோவிந்தன் பழங்காலக் கதைகள் (1964), தமிழ் நாட்டுப் பழங்கதைகள் (1965) என்னும் நூல்களை வெளியிட்டார். தமிழ்நாட்டு நாடோடிக் கதைகள் (1966), தமிழ்நாட்டுக் கிராமிய கதைகள் (1977) என்னும் கதைத் தொகுப்புகளை கி. ராஜநாராயணன் வெளியிட்டார். 'Folk tales of Tamil Nadu' என்ற நூலை 1969-ஆம் ஆண்டு கே. ஏ. சீதாலட்சுமி வெளியிட்டார்.

தமிழ்நாட்டுப் பழங் கதைகள் (1979) என்னும் நூலை இரா. இளங்குமரன் வெளியிட்டார். தென்னிந்திய சிறு கதைகள் (1978) என்னும் கதைத் தொகுப்பை அ. வெ. நடராஜன் வெளியிட்டார். க. கிருட்டினசாமி கொங்கு நாட்டுப்புறக் கதைகளையும், சு. சண்முக் சுந்திரம் தமிழக நாட்டுப்புறக் கதைகளையும், முல்லை முத்தையா கிராமப் புறக் கதைகளையும் தொகுத்து வெளியிட்டார்கள். நாட்டுப்புறக் கதைகளைத் தொகுத்து வெளியிடும் முயற்சியில் இன்றும் பலர் ஈடுபட்டுள்ளனர். இவைகளைத் தவிர, மஞ்சரி, தீபம், கணையாழி, கல்கி, தாமரை, செம்மலர், கலைமகள் போன்ற இதழ்களில் நாட்டுப்புறக் கதைகள் வெளியிடப் படுகின்றன. நாட்டுப்புறக் கதைகளைப் பற்றி அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. எனினும் இன்னும் விரிந்த அளவில் இவை பற்றிய ஆய்வுகள் வரவில்லை.

கதைப்பாடல்கள் :

நீண்ட பாடல் வடிவில் சொல்லப்படும் கதைகளை கதைப்பாடல் (Ballad) என்பர். இவைகள் வில்லுப்பாட்டு, லாவணி, கும்மி, தாலாட்டு, ஊசல் போன்ற வடிவங்களில்

உள்ளன என்று சு. சண்முக சுந்தரம் குறிப்பிடுகின்றார். காகுத்தன் கதை 1178-ஆம் ஆண்டு கதைப்பாடல் வடிவில் பாடப்பட்டது. 1868-ஆம் ஆண்டு அமராவதி கதை அச்சிடப்பட்டு வெளிவந்தது. சித்திரபுத்திர நாயனார் கதை (1868) கொந்தலகான் புலவர் அச்சிட்டு வெளி யிட்டார்.

1869-ஆம் ஆண்டு குஞ்சூ மூசிலப்பை, 'இறவு சுல்கூல் படைப்போர்' கதைப்பாடலை வெளியிட்டார். நல்ல தங் காள் கதை (1869), மதுரைவீரன் கதை (1569) கருணானந்த சுவாமிகளால் வெளியிடப்பட்டன. தேசிங்குராஜன் கதை யை (1869) பரசுராம முதலியார் வெளியிட்டார். அல்லி அர சாணிமாலை (1869), புலந்திரன் தூது (1869), பவளக் கொடி மாலை (1869), பஞ்சபாண்டவர் வனவாசம் (1870), அபிமன் னன் சுந்தரிமாலை (1871) ஆகிய நூல்களை கருணானந்த சுவாமிகள் வெளியிட்டார். கான் சாயபு சண்டை (1870) என்னும் கதைப்பாடல் வீராசாமி நாயுடுவால் வெளியிடப் பட்டது. சக்கூன் படைப்போர் (1871) என்னும் கதைப் பாடல் முகியித்தீன் புலவரால் வெளியிடப்பட்டது. காத்தவ ராயன் கதை (1873) என்னும் நூல் ஆறுமுக சுவாமிகளால் வெளியிடப்பட்டது. கோவலன் கதை (1873) என்னும் கதைப்பாடல் பரசுராம முதலியார் அவர்களால் வெளி யிடப்பட்டது.

மின்னொளியாள் குறம் (1878), வித்வான் குறம் (1878), சிறுதொண்டப் பக்தன் கதை (1874), பொன்னுருவி மசக்கை (1874), கர்ணமகராசன் சண்டை, (1877), புலந்திரன் களவு மாலை (1877), ஏணிவேற்றம் (1877), ஆரவல்லி சூரவல்லி கதை (1885), அல்லிமகராஜன் கதை (1878), தர்மர் அசுவ மேத அம்மானை (1878), அபிமன்னன் சண்டை (1895) போன்ற கதைப் பாடல் நூல்கள் அச்சிட்டு வெளியிடப் பட்டன. இக் கதைப்பாடல்களைப் புகழேந்தி புலவர் எழு தியதாகக் கூறுவர்.

பொன்னர் சங்கர் அம்மானை என்னும் கதைப் பாடல் வாரணவாசிக் கவிராயரால் வெளியிடப் பட்டது.

இருபதாம் நூற்றாண்டில் பல கதைப் பாடல்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டன. பிபாஜி இராஜன் சரித்திரம் (1900, பாலகிருஷ்ண முதலி), எஸ்தர் அரசாணி மாலை (1900, இராமானுஜசாமி), கட்ட பொம்மன் கதை (1934) நீலிக்கதை (1934, இராமசாமிப் புலவர்) அமிர்தவல்லி மாலை (1934, தேவசேனாபதி), பாலநாகம்மாள் (1958, தியாகராஜ செட்டியார்), தோட்டுக்காரி அம்மன் கதை, (1967, ஆறுமுகப் பெருமாள் நாடார்) வீணாதிவீணன் கதை (1967, நா. வானமாமலை), முத்துப்பட்டன் கதை (1971, நா. வானமாமலை), ஐவர் ராஜாக்கள் கதை (1974, நா. வானமாமலை), மாகாளி அம்மன் கதை (1968, ஆறுமுகப் பெருமாள் நாடார்) அண்ணன்மார் சுவாமி கதை (1971), சக்திக்கனல்), குருசாமி கதை (1976. தி. நடராசன்) ஈனமுத்துப் பாண்டியன் கதை (1974, சு. சண்முகசுந்தரம்) மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை (1976, கொடுமுடி சண்முகம்), வன்னிராசன் கதை (1977, லாரன்ஸ் நாயகம்) வன்னியடி மறவன் கதை (1977, தி. நடராஜன்), மார்க் கண்டன் தவசு (1977, ஆறுமுகப் பெருமாள் நாடார்) தம்பிமார் கதை (1977, சி. நடராசன்) ஆகிய கதைப் பாடல் நூல்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டன.

கன்னடியன் போர், சிவகங்கை அம்மானை, சின்னமலைக் கும்பி, புலித்தேவன் சிந்து, இராமப்பையன் அம்மானை, இரவிக்குட்டிப்பிள்ளைப் போர், புலனேந்திரன் அம்மானை, நளச்சக்ரவர்த்தி அம்மானை, கோமதி அம்மன் கதை, பெரியண்ணன் சின்னண்ணன் கதை, மாரியம்மன் கதை, வல்லாளராஜன் கதை போன்ற நூல்களும் வெளிவந்தன.

கதைப்பாடல்களைப் பற்றி ஆய்ந்து மு. அருணாசலம் அவர்கள் கதைப்பாடல் (1976) என்னும் நூலை வெளி யிட்டார். தமிழ் வில்லுப் பாடல்கள் (1979) என்னும் ஆய்வு நூலை தி. சி. கோமதி நாயகம் வெளியிட்டார். இவை களைத் தவிர ஆய்வுக் கட்டுரைகளும், ஆய்வு நூல்களும் வெளிவந்துள்ளன. சு. சண்முக சுந்தரம், ஆறு. இராம

நாதன், தே. லூர்து, பிருந்தா, இ. எப். பெக். போன்றோர் கதைப் பாடல்களைப் பற்றிக் கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

பழமொழிகள் :

பண்டைக்காலம் தொட்டே தமிழ் இலக்கியங்களில் 'பழமொழி' பயின்று வந்துள்ளது. தொல்காப்பியர் பழமொழியை 'முதுசொல்' என்று குறிப்பிடுகிறார், சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், தேவாரம், திருவாசகம், பெருங்கதை, திருவெம்பாவை, கம்ப இராமாயணம் போன்ற நூல்களில் பழமொழி பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றன. 'பழமொழி நானூறு' என்னும் நூல் முன்றுறை அரையனாரால் 400 பழமொழிகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பழமொழிகளைத் தொகுக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தமிழ்ப் பழமொழிகள் (1842, பெர்சிவல்), பழமொழிகள் (1870 எச்.டபுள்யூ.வாரி), பழமொழிப் புத்தகம் (1877, எஸ்.வேணு கோபால் நாயுடு), பழமொழித் திரட்டு (1888, குப்புசாமி), தமிழ்ப் பழமொழிகளின் அகரவரிசை (1894, ஜான்லாசரஸ்), இணைப்பழமொழிகள் (1889, தி. செல்வகேசவராய முதலியார்), பழமொழித்திரட்டு (1902, பு. எ. பார்த்தசாரதிப் பிள்ளை), பழமொழி அகராதி (1913, அனவரதநாயகம்), அபூர்வப் பழமொழிகள் (1964, கஸ்தூரி திலகம்), பழமொழி விளக்கக் கதைகள் (1950, சு. இனியன்), பழமொழி அகர வரிசை (1952), பழமொழிக் கொத்து (1957, வி. நந்த கோபன்), தமிழ்நாட்டுப் பழமொழிகள் (1960, துர்க்காதாஸ் எஸ். கே. சாமி), தமிழகப் பழமொழிகள் (1961, கே. எஸ். லெட்சுமணன்), கோவை பழமொழிகள் (1961, சோமலே), தென்மொழிகளில் பழமொழிகள் (1962), உலகப் பழமொழி கள் (1964, ப. ராமஸ்வாமி), பழமொழியும் பண்பாடும் (1965, செந்துறைமுத்து), பகுத்தறிவுப் பழமொழிகள்(1966,

பூவை. எஸ். ஆறுமுகம்), பழமொழி ஆயிரம் (1968, எஸ். ஏ. சுலைமான்) என்பன போன்ற நூல்கள் வெளி வந்துள்ளன.

பழமொழிகளைப் பற்றி, பல சிறு சிறு கட்டுரைகளும், ஆய்வுக் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. தே. லூர்து அவர்களும், சாலை இளந்திரையன் அவர்களும் பழமொழி களை ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளனர். தமிழ் நாட்டில் வார, மாத இதழ்கள் பழமொழிகளைத் தொகுத்து வெளியிட்டு வருகின்றன.

விடுகதைகள் :

விடுவிக்கப்படவேண்டிய புதிர்களைத் தன்னகத்தே கொண்டுள்ள சிறு, சிறு கதைகளைப் பாடலாகக் கொண் டுள்ள இலக்கிய வகைக்கு 'விடுகதை' என்று பெயர், விடு கதையை, புதிர், வெடி, நொடி, அழிப்பான் பாடல் என் றும் அழைப்பர். விடுகதையைத் தொல்காப்பியர் 'பிசி' என்று குறிப்பிடுகின்றார்.

இருபதாம் நூற்றாண்டில் வெளிவரும் மாத, வார தமிழ் இதழ்கள் விடுகதைகளை வெளியிடுகின்றன. குறிப்பாக ''இராணி''வார இதழ் விடுகதைகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றது.

விநோதப் புதிர்கள் (1965, பி. ஜி. எஸ் மணியன்), விடுகதைக் களஞ்சியம் (1961, ரோஜா, முத்தையா), களவுக் காதலர் கையாண்ட விடுகதைகள் (1962, மு. இராமலிங்கம்), தமிழ் நாட்டு விடுகதைகள், (1963, பூர்ணிமா சகோதரிகள்), விநோத விளையாட்டுகள் (1964, பி. ஜி. எஸ். மணியன்), தமிழில் விடுகதைகள் (1975, ச. வே. சுப்பிரமணியன்), தமிழில் புதிர்கள் ஓர் ஆய்வு (ஆறு. இராமநாதன்) என்பன போன்ற நூல்கள் வெளி வந்துள்ளன.

விடுகதைகளை இன்னும் பலர் தொகுத்து வருகின்றனர். விடுகதைப் பற்றிய ஆய்வுகள் நடந்து கொண்டுள்ளன.

நாட்டுப்புறக் கலைகள் :

நாட்டுப்புற இலக்கியத்தைப் போன்றே நாட்டுப்புறக் கலைகளும் விரிந்து பரந்து காணப்படுகின்றன. இவைகளையும் தற்போது பலர் ஆய்வு செய்து வருகின்றனர். பெருமாள் அவர்கள் 'நாட்டுப்புறக் கலைகள்' என்னும் பெயரில் நூல் ஒன்று வெளியிட்டுள்ளார். அ. அறிவு நம்பி தெருக் கூத்தை ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். இவ் ஆய்வுரையை 'தெருக்கூத்து' என்னும் நூலாக வெளியிட்டுள்ளார். கே. ஏ. குணசேகரன் கரகாட்டக் கலையைப் பற்றி நூல் வெளியிட்டுள்ளார். ந. முத்துசாமி 'அன்று பூட்டிய வண்டி' என்னும் பெயரில் தெருக் கூத்தைப்பற்றி நூல் வெளியிட்டுள்ளார்கள். வெங்கடசாமி நாதன் பாவைக் கூத்தைப்பற்றி நூல் வெளியிட்டுள்ளார். இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகம் வெளியிட்டுள்ள ஆய்வுக் கோவையில் நாட்டுப்புறக் கலைகளைப்பற்றிப் பல கட்டுரைகள் காணப்படுகின்றன.

நாட்டுப்புற விளையாட்டுகளைப் பற்றி இரா. பாலசுப்பிரமணியன் அவர்களும், சடு குடு விளையாட்டைப் பற்றி நவராஜ் செல்லையா அவர்களும் நூல்களை வெளியிட்டுள்ளனர். நாட்டுப்புற விளையாட்டான பல்லாங்குழியைப் பற்றி ஆய்வு நூல் ஒன்றை தாயம்மாள் அறவாணன் வெளியிட்டுள்ளார். வாழப்பாடி சந்திரன், க. இந்திரசித்து ஆகியோர் தெருக் கூத்தைப் பற்றிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளனர். நாட்டுப்புறக் கலைகளைப் பற்றிய ஆய்வு தமிழில் இன்னும் சரியான முறையில் வளரவில்லை.

நாட்டுப்புறவியலில் 'கள ஆய்வு' என்பது மிகவும் முதன்மையானதாகும். இக் கள ஆய்விற்கு வழிகாட்டியாக தே. லூர்து அவர்கள் 'நாட்டார் வழக்காற்றியியல் கள

ஆய்வு' என்னும் நூலை எழுதியுள்ளார். நாட்டுப்புறவியலை ஆய்வு செய்வதற்குத் துணையாக, பதின்மூன்று நாட்டுப் புறவியல் கோட்பாடுகளை விளக்கும் 'நாட்டார் வழக்காற் றியல்' என்னும் நூலையும் அவர் வெளியிட்டுள்ளார். நாட் டுப்புறவியல் தொடர்பாக இதுவரை வெளிவந்துள்ள நூல் கள், கட்டுரைகள், ஆய்வேடுகள் ஆகியவைகளின் விவரங் கள் அடங்கிய ஆய்வடங்கலை (Bibliography) சு. சக்தி வேல் அவர்கள் வெளியிட்டுள்ளார். நாட்டுப்புறவியல் ஆய்வுக்குப் பயன்படும் வகையில் 'கலைச்சொல் அகராதி' ஒன்றையும் அவர் வெளியிட்டுள்ளார்.

இப்பொழுது வரும் இக் கலைச்சொல் அகராதி, கலைச் சொற்கள், வழக்குச் சொற்கள், பேச்சுத் தமிழ், பொதுவான கலைச் சொற்கள் என்னும் அடிப்படையில் விரிவான முறை யில் வெளிவருகின்றது. எதிர் காலத்தில் நாட்டுப்புறவியல் ஆய்வுகள் பல்கிப் பெருகி வளர்வதற்குத் துணைபுரியும் வகை யில் ''நாட்டுப்புறவியல் கலைச் சொல்லகராதி'' என்னும் இந் நூல் வெளியிடப்படுகிறது.

2. நாட்டுப்புறவியல் அகராதி

A

Aberrant —பிறழ்ச்சியான
Abnormal —இயல்பு கடந்த
Aborigine —தொன்முதுமக்கள், ஆதிவாசி
Absolute —பரம்பொருள், தனிமுதல்
Absolutism —முழுமைத்துவக் கொள்கை
Abstract Science —கருத்தியல்
Acculturation —பண்பாட்டுப் பேறு
Accomodation —தகவமைதல்
Achievement —சாதனை
Acquired characteristics } வந்தேறிய பண்புகள்
Action —செயல்
Action type —செயல் வகை
Adaptation —ஒத்தமைதல்
Adolescence —குமரப்பருவம்
Adjustment —பொருத்தப்பாடு
Adult —முதிர்ந்தோர்
Adulthood —முதிர்ந்தோர் நிலை
Adultery —கூடா ஒழுக்கம்
Aesthetics —அழகியல்
Aetiological legends—தோற்றம் பற்றிய பழமரபுக் கதைகள்
Agency —செயலி, முகவர்.
Agencies of social change } சமூக மாற்றுச் செயலிகள்
Agencies of social control } சமூகக் கட்டுப்பாட்டுச் செயலிகள்
Aggregate —கூட்டுத் தொகுதி
Agriculture —விவசாயம்
Agnosticism —இறைப்பற்றின்மை

Ahama gods —பெருந்தெய்வம்
Alchemy —இரசவாதம்
Altar —தொழுகைப் பீடம்
Altruism —பிறர்நலக் கொள்கை
American declaration of Independence } அமெரிக்கச் சுதந்திர அறிக்கை
Anarchism —ஆட்சிவேண்டாக்கொள்கை
Anagram —மாற்றெழுத்துப்புதிர்
Analogy —ஒப்புமை, உவமை
Analytical theory —பகுப்பாய்வுக் கோட்பாடு
Ancester worship —மூதாதையர் வழிபாடு
Animism —ஆவியுலகக் கோட்பாடு
Animamyth —விலங்குத் தொன்மம்
Animatism —உயிரியக்கம்
Animal stories —விலங்குக் கதைகள்
Anonymity —பெயர் தெரியா நிலை, ஆசிரியர் பெயரின்மை
Answer riddle —விடை விடுகதைகள்
Anthroponymy study-மக்கட் பெயராய்வு
Anthropology —மானிடவியல்
Anthropology school-மானிடவியல் பள்ளி
Apollmian —வாழ்வில் சாத்வீகமும் அமைதியும் கொண்ட
Applied folklorists —செயல்முறை நாட்டார் வழக்காற்றியவர்
Applied sociology —விளைவுச் சமூகவியல்
Appraisal —மதிப்பிடல்
Archaeology —தொல் பொருளியல்
Art —கலை
Artificial context —செயற்கைச் சூழல்
Artificial environment } செயற்கைச் சூழ்நிலை
Artistic instincts —கலையூக்கங்கள்
Association —நிலையம், இயைபுக் குழு
Associative Attitudes – இயைபுத் தோரணைகள்

Astronomy —வான நூல்
Atheism —இறையியல் கொள்கை
Atomism —அணுக்கொள்கை
Atomistic pluralism—அணு முதற் பன்மைக் கொள்கை
Attempt —முயற்சி
Attributes —குணவியல்புகள்
Attitudes —உள்ளத் தோரணைகள், மனப்பான்மைகள்
Authority —மேலாணுரிமை
Avunculate —தாய்மாமன் வரிசை
Avunculineage —மருமக்கள் தாயம்
Avunculocality —தாய் மாமனிடந்தங்கள்
Avuncupotestalist —தாய் மாமனாட்சி
Axiological —முடிவான மெய்ம் மதிப்பீடு

B

Ballad —கதைப்பாடல்
Basis —ஆதாரம்
Barbarism —காட்டுமிராண்டித்தனம்
Behaviour —நடத்தை
Becoming —ஆக்கநிலை
Being —இருந்தபடி இருத்தல்
Beinghood —இருந்தபடி இருக்கும் நிலை
Benfey's school —பென்பே பள்ளி
Bigamy —இரு மனைவி மணம்
Biology —உயிரியல்
Biological heredity —உயிரினப் பாரம்பரியம்
Biological Inheritance-உயிரினத்தாயம்
Birth —பிறப்பு
Birth pollution —பிறப்புத்தீட்டு
Bourgeovs —பூர்ஷ்வா, நடுத்தர வகுப்பு
Brain weight —மூளை எடை
Bride price —மணமகளுக்கான பரிசம்

C

Cannibal —தன்னின உண்ணி
Cannibalism —மனித் மாமிசம் உண்ணல்
Canole —படகு
Capitalist class —முதலாளி வகுப்பு
Capltal goods —உற்பத்திப் பொருட்கள் (அ) முதல்கருவிக் பொருட்கள்
Caste —சாதி
Caste Dharma —சாதி தருமங்கள்
Caste Disabilities —சாதித் தடைகள்
Categories —பதார்த்தங்கள்
Causal concept —காரணத்தத்துவக் கருத்து
Causal law —காரண விதி
Cavsation —காரணக் கொள்கை
Causa causarum —காரணங்களுக்கெல்லாம் காரணமான மூல முதற்காரணன்
Cell —உயிரணு
Ceremony —சடங்கு
Character —பண்பு
Charade —சொல் விளையாட்டு
Charm —வசியம்
Child marriage —குழந்தை மணம்
Children songs —குழந்தைப் பாடல்
Christianity —கிறித்துவம்
Christian mysticism—கிறித்துவ ஒருமையாளர் கொள்கை
Chromosomes —பண்பணுக்கள்
Civilization —நாகரிகம்
Civilizational lay —நாகரிகத் தேக்கம்
Civilizational cultural lag } நாகரிகப் பண்பாட்டுத் தேக்கம்
Clan —குலம்
Clan Gods —குலதெய்வங்கள்
Classification —வகைப்படுத்தல்

Class natures —இன இயல்புகள்
Class system —வகுப்பு முறை
Coercion —பலவந்தப் படுத்தல்
Cognition —அறிவு நிலை
Comanagement —நிருவாகத்தில் பங்கு
Common interest —பொதுவான விருப்பார்வங்கள்
Common propensity—பொதுமனச் சார்பு
Communal poetry —மரபுவழிப் பாடல்கள்
Community —சமுதாயம்
Complementarily Harmonous interest } ஒன்றுக்கொன்று உதவுகின்ற இலயம் பொருந்திய விருப்பார்வம்
Complex transformative economy } சிக்கலான மாற்றுப் பொருளாதாரம்
Complex type tales —கலப்புக் கதைகள்
Collateral kin —இடைபுறவு (ஒன்றுவிட்ட)
Collective economy —கூட்டுப் பொருளாதாரம்
Concubine —காமக் கிழத்தி
Conflict —பூசல்
Consciousness of kind-வகை யுணர்ச்சி
Conscious layers —உணர்வுநிலைப் பகுதிகள்
Conscious motive —நனவின் பாற்பட்ட உளக்கி
Consecration —நேர்த்திக்கடன்
Constant unit —மாறாத அலகு
Consumer goods —துய்ப்புப் பொருட்கள்
Consumption —நுகர்வு, துய்ப்பு
Contagious magic —தொத்து மத்திரம்
Contextual theory —சூழ்நிலைக் கோட்பாடு
Contraceptive methods } கருத்தடை முறைகள்

Conundrum —விநோத வார்த்தை
Conventional —மரபொழுங்கு
Conventional poetry—மரபு வழிப் பாடல்கள்
Cosmos —அண்டம் (மகா பிரபஞ்சம்)
Cosmographic myth—உலக விளக்கத் தொன்மம்
Cradle songs —தொட்டில் தாலாட்டுப் பாடல்கள்
Cranial capacity —மண்டையோட்டு கொள்ளவு
Creator —உலகியற்றியான்
Creed —சமயப் பிரிவு
Cremation —பிணம் எரித்தல்
Cries of street vender-விற்பனையாளர் பாட்டு
Critic —திறனாய்வாளர்
Criticism —கருத்துரைத் திறனாய்வு
Cross cousin —மாமன், அத்தைப்பிள்ளை
Cross Cultural —கலப்புப் பண்பாடு
Crypto-religious movements —மறை பொருளுடைய மத இயக்கங்கள்
Cult —பிரிவு (முறை)
Culture —பண்பாடு
Cultural Anthropology —பண்பாட்டு மானிடவியல்
Cultural Civilizational lag —பண்பாடு நாகரிகத் தேக்கம்
Cultural lag —பண்பாட்டுத் தேக்கம்
Cultural pattern —பண்பாட்டுக் கோலம்
Cultural survival —பண்பாட்டு எச்சம்
Cultural value —பண்பாட்டு மதிப்பு
Curse —சாபம்
Customs —பழக்கம்

D

Daily life —வாழ்வியல்
Data —தரவுகள்
Dating —நாள்குறிப்பிடுதல்
Death —இறப்பு
Death rate —இறப்பு விகிதம்
Death riddles —மரண விடுகதைகள்
Death taboo —சாவு விலக்கு
Deductive method —உய்த்துணர் முறை
Deities —தேவதைகள்
Demon —பேய், பூதம்
Denotation —பொருட்குறி
Dependent moves —சார்பு அசைவுகள்
Descent —வம்சம், கால்வழி
Description —வருணனை
Descriptive riddles —வருணனை விடுகதைகள்
Descriptive law —விளக்கவுரை விதி
Destiny —ஊழ்
Development —வளர்ச்சி
Diagram —விளக்கப் படம்
Dialectics —முரண் நிலைத் தருக்க இயல்
Dialectology —வட்டார வழக்கியல்
Dice —பகடை
Diffusion —பரவல்
Direct Apprehension-நேரடியாக அறிதல்
Direct Conflict —நேரடிப் பூசல்
Direct co-operation —நேர்முகக் கூட்டுறவு
Disorganization —நிலையமைப்பழிவு
Dissociative attitudes } இயைபற்ற அல்லது இயை பழிவுத் தோரணைகள்

Distribution —பகிர்வு
Dionysian —வாழ்வில் முரட்டுத் தனமும் பலாத்காரமும் கொண்ட
Diviner —காரணங் கண்டுப்பிடிப்பவன்
Divine being —இருந்தபடி இருக்கும் தெய்வீகப் பொருள்
Divorce —மண விலக்கு
Doctrine —கோட்பாடு
Doctrine of Incarnation } இறைவன் அவதாரக் கோட்பாடு
Dowry —பெண்வழிச் சீதனம்
Driving force —உத்தித் தள்ளும் சக்தி
Dualism —இருமைக் கொள்கை
Duties —கடமைகள்
Dysfunctious —செலவின்மை

E

Ear boring ceremony-காதணிச் சடங்கு
Economics —பொருளாதாரம்
Economic Activity —பொருளாதார நடவடிக்கை
Economic system —பொருளாதார அமைப்பு
Educational system —கல்வி அமைப்பு
Efficient cause — நிமித்த காரணம்
Ego —அகம், நான், தன்முனைப்பு
Element —(தனிமம்) கூறு
Elite —மேலவர்
Elopement —உடன் போக்கு
Emotional Insulor —உணர்வுக் காப்பீடு
Endogamy —அகமணம்
Enigma —புதிர்

Entity —முழுநிறைக் கூறு
Environment —சூழ்நிலை
Epic ballads —தெய்வீகக் கதைப் பாடல்
Epigram —விகடப்பா, நகைச்சுவைப் பாடல்
Epistemology —அறிவளவை இயல்
Esoteric —மறை பொருள்
Eternal —என்று முள்ள, நிலையான
Ethics —ஒழுக்கவியல், அறவியல்
Ethical qnalities —அறப்பண்புகள்
Ethinical group —இனக்குழு
Ethinocentrism —இன மையக் கொள்கை
Ethinography —இன விளக்கவியல்
Ethnology —மனித இன நூல்
Etiological tales —காரண காரிய விளக்கத் கதைகள்
Etimological tales —சொற்பொருள் விளக்கக் கதைகள்
Etymology —சொல் வரலாறு
Eugenics —குணமேம் பாட்டியல்
Euthanasia —எளிய சாக்காட்டு முறை
Evolute —பரிணாமப் பொருள்
Evolution —பரிணாமம்
Evolutionary theory—பரிணாமக் கோட்பாடு
Evolutionist —பரிணாமவாதி
Exclusive Interests —பிரிவுபட்ட குறிப்பிட்ட விருப்பார்வங்கள்
Exogamy —புறமணம்
Exocrist —பேயோட்டி
Expressive style —வெளியீட்டு முறை

Expertence —அனுபவம், பட்டறிவு
Existence —இருத்தல், இருப்பு நிலை
Extended family —விரிவுற்ற குடும்பம்
External Act —புறச் (செயல்) சட்டம்
External behaviour —புறநடத்தை

F

Fairs —சந்தைகள்
Fairy tales —தேவதைக் கதைகள்
Faculty of Judgement-தீர்ப்பளிக்க உதவும் அறிவுத்திறன்
factor —காரணி
fate —விதி; ஊழ்
Family —குடும்பம்
Family planning —குடும்பநலத் திட்டம்
Family of orientation-பிறந்த குடும்பம்
Family of procreation —புகுந்த குடும்பம்
Fascism —ஆட்சி வல்லாண்மை முறை
Fashion —கால வண்ணம்
Fasting —பட்டினி கிடத்தல்,உண்ணா விரதமிருத்தல்
Fertility —செழுமை
Festival —விழா
Fetish —புனிதப் பொருள்
Fetishism —புனிதப் பொருள் வழிபாடு
Feudal class —நிலமானிய வகுப்பு
Finer configuration of brain } மூளையின் துல்லியப் பகுதிகளின் அமைப்பு
Finitude —முடிவுள்ள தன்மை

Fire worship —நெருப்பு வழிபாடு
Five membered syllogism } ஐந்துறுப்புக் குழு
Fixed phrase genere—நிலைத்த அமைப்பு
Flywheel of society —சமூகத்தை இயங்கச் செய்யும் சக்கரம்
Folk —நாட்டுப்புறம்
Folk art —நாட்டுப்புறக் கலை
Folk ballads —நாட்டுப்புறக் கதைப் பாடல்கள்
Folk believes —நாட்டுப்புற நம்பிக்கைகள்
Folk botany —நாட்டுப்புறத் தாவரவியல்
Folk cookery —நாட்டுப்புறச்சமையல் முறை
Folk culture —நாட்டுப்புறப் பண்பாடு
Folk deites —நாட்டுப்புறத் தெய்வங்கள்
Folk dialogues —நாட்டுப்புற உரையாடல்கள்
Folk group —நாட்டுப்புறக் குழு
Folk lorogy —நாட்டுப்புறவியல்
Folk history of literature } நாட்டுப்புற இலக்கிய வரலாறு
Folk literature —நாட்டுப்புற இலக்கியம்
Folk lore —நாட்டுப்புறவியல்
Folk loristics —நாட்டார் வழக்காற்றியலர்
Folk medicine —நாட்டுப்புற மருத்துவம்
Folk music —நாட்டுப்புற இசை
Folk painting —நாட்டுப்புற ஓவியக் கலை
Folk poet —நாட்டுப்புறக் கவிஞன்
Folk lore processes —நாட்டார் வழக்காற்றுப்படி. முறைகள்
olk riddless —நாட்டுப்புற விடுகதைகள்

Folk song —நாட்டுப்புறப் பாடல்
Folk speech —நாட்டுப்புறப் பேச்சு வழக்கு
Folk tales —நாட்டுப்புறக் கதைகள்
Folk ways —பொதுமக்கள் வழக்கு
Folk zoology —நாட்டுப்புற விலங்கியம்
Food quests —உணவு முறைகள்
Formal syllogism -வடிவநிலை, முக்கூற்று முடிவு
Founded religions —தோற்றுவிக்கப் பட்ட சமயங்கள்
Foundational scriptures } சமய அடிப்படைத் திருநூல்கள்
Four wishes —நான்கு விருப்பங்கள்
Fraternal polyandry—பல சகோதர மணம்
Free goods —இலவசப் பொருட்கள்
Free phrase genere —மாறிச் செலும் அமைப்பு
Function —செயல்பாடு
Functional alternative-செயல் மாற்று
Functional concept —செயல்திறக் கோட்போடு
Functionalist theory—செயல் கோட்பாடு
Fundamental rights —அடிப்படை உரிமைகள்
Funeral ceremony —நீத்தார் சடங்கு

G

Genes —உயிர் மின்கள், மரபிகள்
Genetic changes —பிறப்பு மாற்று, மரபிமாற்றம்
General will —பொது விருப்பம்
Generic feature —பேரினப் பொதுக் குணம்
Geographical Environment } நிலவியல் சூழல்
Germinal cell —தோற்ற உயிரணு

Gestalt —ஜெஸ்டால்ட் என்னும் உள வியல் அறிஞர்
Great tradition —பெரும் பாரம்பரியமரபு
Group interest —குழு விருப்பார்வம்
Group mind theory—குழுமனக் கோட்பாடு
Guild —கில்டு வணிகக் கழகம்
Guild socialism —கில்டு சோஷலிசம்

H

Habit —பழக்கம்
Habituation —பழக்கவியைபு
Harmonious interest-இலயம் பொருந்திய ஒத்த விருப்பார்வம்
Head dress —தலையணி
Head hunting —தலைவேட்டை
Hedonism —இன்பக் கொள்கை
Hemispheric theory —அரை உலகக் கோட்பாடு
Hereditary —பரம்பரை
Heritage —வழிமுறை, பண்பேற்றம்
Heroic ballad —வீரர் கதைப் (பரணி) பாடல்
Heroic myth —வீரநிலைப் புராணக்கதை
Hierarchical organization } தர வரிசை நிலையமைப்பு
Heterodox —நாத்திகம்
Hexagon —அறுகோணம்
Hierarchy —தர வரிசை
Historical ballad —வரலாற்றுக் கதைப்பாடல்
Historical geographical theory } வரலாற்றுப் புவியியல் கோட்பாடு
Historical origin —தொடக்க வரலாறு

Historical Reconstruction Theory — வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு
Home gods —வீட்டுத் தெய்வங்கள்
Homogeneous —ஒரே சீரான
Homosexuality —தன்பாலுணர்ச்சி
Horizontal Divisions-கிடைநிலைப் பகுப்புகள்
Hormic Energy —நோக்குடைய சக்தி
Human stories —மனிதக் கதைகள்
Hypothesis —கற்பிதக் கொள்கை

I

Idea —கருத்து
Ideal —குறிக்கோள், உன்னதக் குறிக்கோள்
Idoeological theory — இலட்சியக் கோட்பாடு
Idolatory —உருவ வழிபாடு
Imagination —கற்பனை
Imitative magic —போன்மை மந்திரம்
Immediate motire —உடனடி ஊக்கி
Impulses —வேட்கைகள்
Inbreeding —உட்குழு மணமுறை
Incarnation —அவதாரம்
Incest —தகாப்புணர்ச்சி
Inclusive Interest —ஒன்றுபட்ட விருப்பார்வங்கள்
Independent moves —சார்பிலா அசைவுகள்
Inter disciplnary approach — பல்துறை அணுகுமுறை
Indirecttest —மறைமுக ஆய்வுநிலை
Inductive method —தொகுப்பு வழிமுறை
Indirect conflict —மறைமுகப் பூசல்

Indirect co-operative-மறைமுகக் கூட்டுறவு
Individual beliefs —தனி மனித நம்பிக்கைகள்
Individual family —தனிக் குடும்பம்
Individual Interest —தனியார் விருப்பங்கள்
Individualstic capitalism } தனியார் சர்வாதீனம், முதலாளித்துவம்
Individualistic theory-தனி மனிதக் கோட்பாடு
Indology —இந்தியவியல்
Induced natural contex } தூண்டப்பட்ட இயற்கைச் சூழல்
Industrialism —தொழிலியம்
Industrial relation —தொழில் துறை உறவு
In-Group —உட்குழு
Inharmonious interest } ஒருமைப்பாடற்ற (இலயமற்ற) விருப்பார்வம்
Inner Harmonies —உள்ளொருமை, அக ஒருமைப்பாடு
Initial form of a family } குடும்பத்தின் மூல முதல் வகை
Initiation —துவக்கச் சடங்கு
Instability —நிலையாமை
Instincts —இயல் பூக்கங்கள்
Instinctive Drives —இயல் பூக்கத் தூண்டல்கள்
Institution —நிறுவனம்
Institutional structure-நிறுவன அமைப்பு
Intellectual enquiry —அறிவு ஆராய்ச்சி
Intellectual motives —மன ஊக்கிகள், அறிவு ஊக்கங்கள்
Intelligence —நுண்ணறிவு
Intelligence Quotient-நுண்ணறிவுத் திறன்

Interest —விருப்பார்வங்கள்
Interdiction —தடை
Interview —சொல்லாடல், நேர்முகத் தேர்வு
Intermediate group —இடைநிலைக் குடும்பம்
Intimation —அறிவித்தல்
Intuition —உள்ளுணர்வு

J

Jati —சாதி
Joint Family —கூட்டுக் குடும்பம்
Joint ownership —கூட்டுடைமை
Joking relationship —கேலி செய்யும் உறவு
Judgement —தீர்ப்பு

K

Karma —வினை
Kin —இன உறவு
Kinship —உறவு முறை
Kinship term —உறவு முறைச் சொல்
Kinship usage —உறவு முறை வழக்கம்
Kiva —சடங்கு அறை (ப்யூப்லோ)
Knower —அறிபவன்
Knowledge —அறிவு
Known object —அறிபொருள்
Kula —தோபு மக்களின் வியாபார முறை

L

Laboratory — ஆய்வுக்கூடம்
Labouring class —பாட்டாளி வகுப்பு
Lack liquidated —குறை நீக்கம்
Lack something —குறை, சிறுகுறை
Laments —ஒப்பாரி ✓
Latent functions — உள்ளீடான செயல்கள்
Law of God — கடவுள் விதி, கடவுளின் சட்டம்
Law of nature —இயற்கை விதி
Law of reason —பகுத்தறிவு விதி
Legalistic morality —சட்டத்திற்குட்பட்ட அறநிலைத்தன்மை
Legends —பழ மரபுக் கதைகள்
Levirate —மதனி மணம்
Life force —உயிர் ஆற்றல்
Like begets like —இனம் இனத்தைப்பெருக்கும்
Like interest —ஒத்தத் தன்மையுடைய விருப்பார்வங்கள்
Lineage —பரம்பரை
Lineal kin —வழியுறவு
Linguistics type —மொழியியல் வகை
Literary riddles —இலக்கிய விடுகதைகள்
Little tradition —சிறுநெறி மரபு
Lively fossil —உயிரோடுள்ள புதைவடிவம்
Logic —அளவை இயல்
Logieal realism —காட்சி அளவைக் கொள்கை
Logical technique —அளவையியல் நுணுக்கம்
Logogriph —எழுத்துக்கூட்டு, சொற்புதிர்

Love songs	—காதல் பாடல்கள்
Lullaby	—தாலாட்டு
Lust	—காமம்
Lynching	கருப்பர்களைப் பொது இடத்தில் அனாவசியமாகக் கொடுமைப் படுத்தல்

M

Magic	—செய்வினை மந்திரம், மாந்திரிகக் கலை
Magical actions	—மாந்திரீக வித்தைகள்
Magieo mellgiour curing practice	— அறிவு, அயல் நம்பிக்கை செய்வழமை
Magieo religious medicine	மத மாந்திரீக மருத்துவம்
Magic stories	— மந்திரக் கதைகள்
Major term	—துணிபொருட் பதம்
Mammoth	—மாமதம் என்னும்யானை வகை
Mana	—மானா, அறநெறி மேலான்மை
Manaism	—மானயிசம், அறநெறி மேலாண்மைக் கொள்கை
Manifest functions	—வெளிப்படையானசெயல்கள்
Manner	—நடத்தை
Marxism	—மார்க்சீயக் கொள்கை
Marriage	—திருமணம்
Marriage song	—திருமணப் பாடல்
Mask	—முகமூடி
Mask gods	—முகமூடிக் கடவுள்கள்
Mass psyche	—திரள் மனம்
Mass cultural theory	—மக்கட் பண்பாட்டுக் கோட்பாடு

Maternal uncle — தாய் மாமன்
Material cause — உலோகாயதக் காரணம், முதற் காரணம்
Materialist hypothesis-சடக் கொள்கை,கருதுகோள்
Materialistic theory } பொருள் முதல்வாதக் கொள்கை, சடக்கொள்கை,பொருள் சார் முடிவுக் கொள்கை
Matrilineal —தாய்வழி
Matrilocal —தாயிடந் தங்கல்
Matrimony —திருமணம்
Matriarchal Family —தாய்த்தலைமைக் குடும்பம்
Matripotestality —தாயாட்சி
Mechanist persvation } இயந்திரக் கதிப் போக்குக் கருத்து
Mediate cognition —ஊடக அறிவு நிலை
Mediate knowledge —ஊடக அறிவு
Medium —ஊடகம்
Mental differences —உள நுண்ணறிவு வேறுபாடு
Merry riddle —களிப்பு விடுகதைகள்
Meta folklore —வழக்காறு பற்றிய வழக்காறு, புலன் கடந்த உணர்வுநிலை அறிவு
Metaphysics —அடிப்படைத் தத்துவம் பற்றிய நுண் ஆய்வியல்
Method —முறை
Metaphor —உருவகம்
Metrics —யாப்பு
Middle term —மத்திம பதம்
Migration theory —புலம் பெயர்வுக் கோட்பாடு
Minor term —பக்கப் பொருட்பதம்
Mixed attitudes —கலப்புத் தோரணைகள்

Mixed lags —கலப்புத் தேக்கங்கள்
Molecule —கூட்டணு, மூலக் கூறு
Monism —ஒருமைக் கோட்பாடு
Monogamy —ஒருதாரமணம், ஒரு சமயம், ஒருவரையே மணந்திருத்தல்
Monogamous family—ஒருதார மணக் குடும்பம்
Monotheism —ஒருகடவுட் கோட்பாடு
Monotype talse —வெறுங் கதைகள், ஒரே போக்கான கதைகள்
Morals —நீதி நெறி முறைகள்
Morallode —ஒழுக்க முறைமை
Morality —ஒழுக்கம்
Moral discipline —அறவியல் ஒழுக்கப் பயிற்சி
Moralists —அறவியலறிஞர்கள்
Moral judgment —அறவியல் தீர்ப்பு
Moral order —அறநிலை ஒழுங்கு
Moral standard — ஒழுக்கப் படித்தரம்
Mores —ஒழுக்கப் படிப்பாடு
More complex type tales } மிகைக் கலப்புக் கதைகள்
Morale —மன உறுதி
Motifs —கதைக் கூறுகள்
Motif index —கதைக் கூறடைவுகள்
Mother goddess —தாய்த் தெய்வம்
Motive — ஊக்கி
Moves —அசைவுகள்
Movements —இயக்கங்கள்
Myths —புராணக் கதைகள்
Mythical ballads —புராணக் கதைப் பாடல்கள்

Mythology —புராணவியல்
Mythological school—புராணவியல் பள்ளி
Mystic —ஒருமையாளர், அனுபூதிமான், சித்தர்
Mystical tradition —ஒருமையாளர் மரபு, அனுபூதி மரபு
Mussel —கிளிஞ்சல்
Mutation —மாறுபாடு

N

Name riddle —பெயர் விடுகதைகள்
Natural context —இயற்கைச் சூழல்
Natural environment -இயற்கைச் சூழ்நிலை
Natural element —இயல்பான கூறு
Natural folk medicine } இயற்கை மருத்துவம்
Natural selection —இயற்கைத் தேர்வு
Natural theory —இயற்கைக் கோட்பாடு
Nazism —நாசிசம்
Nature song —இயற்கைப்பாடல்
Negative —எதிர்மறை
Neo-logical movement புதிய அளவை இயக்கம்
Neo-platonism —புதியபிளேட்டோ கொள்கை
Neurotic —நரம்பு நோய் உள்ளவன்
New-experience —புதிய அனுபவம்
Nick names —பட்டப் பெயர்கள், கேலிப் பெயர்கள்
Nomad —நாடோடி

Non-dualism —இருமையின்மைக் கொள்கை
Non-dual reality —இருமை இல்லா உள்பொருள்
Non-existence —இன்மை
Non-verbal art —வாய்மொழி சாராத கலை
Noodle tales —முட்டாள் கதைகள்
Normative law —நெறியுறைவிதி
Normative science —நெறியுறையியல்
Normality —சாதாரண தன்மை
Nostalgia —தாயக நாட்டம்
Nubility rites —பூப்புச் சடங்கு
Nuclear family —கருக்குடும்பம்
Numerical pluralism } எண் பன்மைக் குடும்பம்

O

Object —காணப்படு பொருள்
Observation —நுண்காட்சி
Observances —சடங்கு முறைகள்
Odd numbers —ஒற்றை எண்கள்
Offerings —படையல்கள்
Omens —நிமித்தங்கள். சகுனங்கள்
Onomastics —பெயர் ஆய்வு
Ontology —உண்மையியல்
Ontological —உயிர்த்தத்துவ விளக்கம்
Optimum population } உத்தம மக்கள் தொகை
Oral literature —வாய்மொழி இலக்கியம்
Oral formulaic theory } வாய்மொழி வாய்ப்பாட்டு கோட்பாடு

Organism —உயிரி
Organismic theory —உயிரிக் கோட்பாடு
Original poetry —தொன்மைப் பாடல்கள்
Origin —தோற்றம்
Origin of the family —குடும்பத்தின் தோற்றம்
Orthodox —ஆஸ்திகம், வைதீகம்
Outgroup —வெளிக்குழு

P

Pagan —புறமதத்தினன்
Pantheism —பன்மைக் கோட்பாடு
Pantheon —தெய்வக் குழுக் கோட்பாடு
Parasite —ஒட்டுண்ணி (சுரண்டி வாழ்பவன்)
Parting —பிரிவு
Pattern —கோலம், வகை
Patron —ஆதரவாளர்
Patrichal family —தந்தைத் தலைமைக்குடும்பம்
Patrilineal —தந்தைத்தாயம்
Patrilocal —தந்தையிடந்தங்கல்
Patripotestality —தந்தையாட்சி
Peasant —குடியானவன்
Pendular change —சீரியக்கமாற்றம்
Perception —புலன்காட்சி, நுகர்ச்சி
Performance —நிகழ்த்துதல்
Personal —தனித்தன்மையுடைய
Persuation —இதமாக எடுத்துச் சொல்லி ஏற்க வைத்தல்
Phenomena —புறநிலைத் தோற்றப்பொருள்கள், புறநிகழ்வுகள்

Phonetics —ஒலியியல்
Philological theory —மொழியியற் கொள்கை
Philosophy —தத்துவ நூல்
Philosophical monotheism } தத்துவ நிலை ஒரு கடவுட் கொள்கை
Philosophical riddles -தத்துவ விடுகதைகள்
Physical —பௌதிக
Physical anthropology } உருவத் தோற்ற மானிடவியல்
Physical order —பௌதிக நிலை ஒழுங்கு
Physiology —உடற்செயலியல்
Pigmentation —தோலின் வண்ணப் பொருள்
Pilgrim —ஆன்மீகப் பயணி
Pioneers —முன்னோடிகள்
Plastic art —உருவாக்கத் தக்க நளினக் கலை
Pluralism —பன்மைக் கொள்கை
Plurality of causes —பல காரணத்தத்துவம்
Pollution —தீட்டு
Political science —அரசியல் கலை
Polygamy —பல்லரிவை மணம்
Polygamous family —பல்தார மணக் குடும்பம்
Polyandry —பல்லாண் மணம்
Polytheism —பல கடவுட் கோட்பாடு
Popular antiquities —பொது மக்களைச் சார்ந்த மரபு முறைகள்
Population —மக்கள் தொகை
Population pattern —மக்கள் தொகைக் கோலம்
Possible —சாத்தியமான
Possibilities —நிகழ் வாய்ப்புகள்

Positive law —இயல்புரை விதி
Positivistic school —உடன்பாட்டு மரபு
Positivistic school of sociology } உடன்பாட்டு மரபுச் சமூகவியல் (நேர்முக அறிவியல் மரபுச் சமூகவியல்)
Pregnancy rites —கருப்பகாலச் சடங்குகள்
Prediction —முன் கூறுதல்
Prejudice —முன்தீர்ப்பு, வெறுப்பு, தப்பெண்ணம்
Prescriptive law —வரையறை விதி
Priest —பூசாரி
Primal matter —மூலச் சடப்பொருள்
Primary group —முதனிலைக் குழு
Primitive law —பூர்விகச் சட்டம்
Process —செய்முறை
Production —உற்பத்தி
Progivathism —முன் தாடைகளின் அமைப்பு
Proletariat or labouring class } தொழிலாளி வகுப்பு
Propelling force —செயலாற்றல் தரும் சக்தி
Prophet —தீர்க்கதரிசி, அறிவர்
Propensity —உட்தூண்டல்
Prostitution —பரத்தைமை
Proto tale —தொல்வடிவக் கதை
Protege —பாதுகாப்பளிப்பவன்
Proverbs —பழமொழிகள்
Psychotic —உளநோயாளி
Psychic dispositions—உள நாட்டங்கள்
Psychic entity —உளஞ் சார்ந்த முழுநிலைக் கூறு

Psychic medium —மன ஊடகம்
Psychology —உளவியல்
Psychologist —உளவியலறிஞர்
Psycho analysis —உளப் பகுப்பாய்வு
Psycho analytic interpretation } உளப்பகுப்பாய்வு விளக்கம்
Psycho analytical school } உளப்பகுப்பியல் பள்ளி
Psycho analytical theory } உளவியல் ஆய்வுக் கோட்பாடு
Psycho-physical organism } மனோ உடல் உயிரி
Psychopathist —உள மருத்துவர்
Puberty —பூப்பு
Pugnacity —போரூக்கம், போர்வெறி
Pure race —கலப்பில்லாத இனம்
Puzzle —சொற்புதிர்

Q

Quality —பண்பு
Quantity —அளவு
Question aire —வினாவரிசை நிரல்
Quiz —நொடிவினா

R

Race —இனம்
Race prejudice —இன வெறுப்பு
Racial herdity —இனப்பரம்பரை
Rank —மதிப்புத்தரம்
Rational enquiry —அறிவு முதல் ஆராய்ச்சி

Rational reflection —பகுத்தறிவு ஆராய்ச்சி
Reality —உள்பொருள், மெய்ம்மை
Realism —காட்சிப் பொருள் கொள்கை
Realistic monism —காட்சி ஒருமைக் கொள்கை
Realistic system —காட்சிப் பொருள் கொள்கை முறைமை
Rebus —ஓவிய வடிவப்புதிர்
Reciprocal Non-Existence } பரிமாற்று இன்மை
Recognition —அறிந்து கொள்ளுதல்
Recreative riddle —பொழுது போக்கு விடுகதைகள்
Reductionad Absurdum } பிழைக்கு ஒடுங்கல்
Re-enactment ritual—திரும்பச் செய்யும் சடங்கு
Refrain song —அடுக்கிக்கூறும் பாடல்
Regional lore —வட்டார வழக்கு
Relativism —சார்புக்கொள்கை
Religion —சமயம்
Religious attitude —சமய மனப்பாங்கு
Religious consciousness } சமய உணர்வு
Religion of Humanity-மனித வர்க்கத்தின் சமயம்
Religious instinct —மத இயல்பூக்கம்
Religious motives —சமய ஊக்கிகள்
Religious Rites —மதச் சடங்குகள்
Repetition —திரும்புரை
Response —துலங்கல்
Result —பயன்; விளைவு
Revelation —உணர்த்தப்பட்ட அறிவு

Rhythm —தாளகதி
Riddle —விடுகதை
Riddle Poetry —விடுகதைக் கவிதைகள்
Right —உரிமை
Rite —சடங்கு
Ritual —சடங்கு
Ritual dance —சடங்கு ஆட்டம்
Romantic song —காதல் கதைப் பாடல்
Root-letter —அடி எழுத்து
Root-reality —அடி உள் பொருள்

S

Sacred —தூய்மையான
Sacrifice —வேள்வி, தியாகம், பலி கொடுத்தல்
Sacrificial religion —வேள்விச் சடங்கு மதம்
Sacrificial rite —வேள்விச் சடங்கு
Scalp —தலைத்தோல்
Scalp dance —தலைத்தோல் நடனம்
Scale, Efficiency Freedom on mutuality } தரம், திறன், சுதந்திரப் பரிமாற்றம்
Scarcity —கிடைப்பருமை
Schedule —வினாப்பட்டியல், அட்டவணை
Schools of folklore —நாட்டுப்புறவியல் பள்ளிகள்
Science type —அறிவியல் வகை
Secondary group —வழிநிலைக்குழு
Second nature —இரண்டாம் இயல்பு
Security —பாதுகாப்பு
Self —ஆன்மா, தன்னிலை.

Self Assertion —தன்னெடுப் பூக்கம்
Self Determination —தன் தீர்மானிப்பு
Semoitics —குறியணியல்
Senseactivity —புலச்செயல்
Sense contact —புலத்தொடர்பு
Sensism —புலன்வழிக் கொள்கை
Serenade —முல்லைத் தீம்பாணி
Serf —பண்ணையடிமை
Serfdom —பண்ணை அடிமைத்தனம்
Services —பணிகள்
Sex-craving —காமவெறி
Sexual Promiscuity —கட்டுப்பாடற்ற பாலினப் புணர்ச்சி
Sex relationship —பாலின உறவு முறை
Sex symbol —இனக் குறியீடு
Shaman —சாமியாடி
